பல்கலைக்கழக மானியக்குழு நிதிநல்கையுடன்

## தேசியக் கருத்தரங்கம்

# இலக்கியத்தில் இறைக் கொள்கை

## ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு

15.02.2018



## முதுகலைத் தமிழ்த்துறை


**ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி**

தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் 'முதல்' தர நிர்ணயம் பெற்றது

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

DST FIST Supported College since 2015

பெரியகுளம் - 625601, தேனி மாவட்டம்.

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இலக்கியத்தில் இறைக்கொள்கை (ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு) |
| ISBN | : | 978-81-923121-6-3 |
| பொருள் | : | இலக்கியத்தில் காணலாகும் பக்தி மார்க்கக் கொள்கைகள் |
| ஆசிரியர் | : | முதுகலைத் தமிழ்த்துறை |
| ஆண்டு | : | பிப்ரவரி 2018 |
| வெளியீடு | : | முதுகலைத் தமிழ்த்துறை<br>ஜெ.அ. மகளிர் தன்னாட்சிக் கல்லூரி<br>பெரியகுளம்<br>தேனி மாவட்டம் |
| பக்கம் | : | XVI + 261 |
| வடிவமைப்பு & அச்சாக்கம் | : | அக்கா அச்சகம்<br>ஜெ. அ. மகளிர் தன்னாட்சிக் கல்லூரி வளாகம், பெரியகுளம், தேனி மாவட்டம் |

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ப. எண் |
|---|---|---|
| 1. | விவிலியத்தில் தூய பவுலின் இறைக்கொள்கை<br>முனைவர் அருட்சகோதரி லூ.சகாய லில்லி | 01 |
| 2. | திருவிவிலிய கடித இலக்கியங்கள் காட்டும் 'அன்பு வழியது'<br>முனைவர் அருணாதேவராஜ் இராஜேந்திரன் | 07 |
| 3. | விவிலிய உவமைக் கதைகள் வெளிப்படுத்தும் இறைக்கொள்கைகள்<br>செ. லிட்டில் ப்ளவர் | 13 |
| 4. | புனித பவுலடியார் கூறும் இறைக்கொள்கைகள்<br>செல்வி கா.சிரேஸ்எஸ்தர் | 17 |
| 5. | காப்பிய இறைக்கொள்கையில் வளனார்<br>அருட்சகோதரி. முனைவர் தி. நிர்மலா<br>அருட்சகோதரி. சி ஜோதி | 22 |
| 6. | இயேசுவின் பிறப்பில் தேம்பாவணி காட்டும் இறைமை<br>முனைவர் அருட்சகோதரி. இ.அல்போன்சாள் | 28 |
| 7. | தேம்பாவணியில் இல்லறத் துறவறம்<br>வே. புளோரா பவுலின் மேரி | 33 |
| 8. | தேம்பாவணி காட்டும் மாண்பு<br>முனைவர் சி.அருள் மைக்கேல் செல்வி | 38 |
| 9. | தேம்பாவணியில் மரியன்னையின் மாட்சி<br>ஆ.மெர்சி ஆஞ்சலா | 44 |
| 10. | தேம்பாவணி - இயற்கையில் இறைக்கொள்கை<br>செல்வி. க. ஜுலியட் தேவ கிருபை | 48 |
| 11. | கித்தேரியம்மாள் அம்மானை காட்டும் இறைக்கொள்கை<br>திருமதி அ.அம்சலேகா | 53 |
| 12. | தமிழ்க் கிறித்தவ இலக்கியங்களில் இறைக்கொள்கைகள்<br>சே. சலோமி இராஜரீகம் | 58 |
| 13. | இலக்கியத்தில் இறைக் கொள்கை<br>தி. அமிர்தகணேசன் (அகன்) | 63 |

# 9. தேம்பாவணியில் மரியன்னையின் மாட்சி

ஆ.மெர்சி ஆஞ்சலா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பாத்திமா கல்லூரி,
மதுரை.

## முன்னுரை

மூத்த மொழியாம் நம் தமிழ் மொழியில் ஈடு இணையற்ற இலக்கியங்கள் மிகுதியாகப் படைக்கப்பட்டுள்ளன. அவ்விலக்கியங்களுள் சமயங்களின் அடிப்படையில் பல்வேறு காப்பியங்கள் தோன்றின. வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி கிறித்தவ சமய காப்பியங்களுள் தலைசிறந்து விளங்குகின்றது. இயேசுவின் தந்தை வளனின் வரலாற்றை மையமாகக் கொண்ட இக்காப்பியத்தில் மரியன்னையின் மாண்புகள் கூறப்பட்டுள்ளன.

## மரியன்னையின் குணநலன்கள்

கிறித்தவ நம்பிக்கையில், பிறக்கும் ஒவ்வொருவரும் சன்மப்பாவத்துடனே பிறப்பர் என்பர். அதாவது நம் பெற்றோர் செய்த பாவங்களுடன் நாம் பிறக்கிறோம். ஆனால் கன்னிமரியாள் சன்மப் பாவம் எனும் பிழையில்லாமல் தோன்றியவள். தூய மனமும் அறிவும் ஆண்மையும் தெளிந்த தெய்வக் காட்சியும் வல்லமையும் அருளும் மாண்பும் துணிவும் ஆய்வுத் திறனும் வரங்களாகப் பெற்று எல்லாரும் வியப்படையுமாறு சிறப்புடன் திகழ்ந்தாள். இதனை,

> **"தாயாக வளர் கன்னி, தாய் வயிற்றில்**
> **பழம் பழிசேர் தவறு இல்லாது**
> **தூய் ஆகம் அறிவு ஆண்மை சுடர் காட்சி**
> **(தேம்.திரு.பட,பா.எ.27)**

என்ற பாடல் வழி உணர்த்துகிறார். குணவதியான அன்னையை நாடிச் செல்பவர்கள் விண்ணக பேரின்பத்தையும் பெறுவர் என்பதனைத் திருக்காவலூர் கலம்பகத்திலும் வெளிப்படுத்துகின்றார் வீரமாமுனிவர்.

> **"அன்னையே நீயல்லா லன்புற்றே னேயறிந்தீங்**
> **கென்னையே யார்யா ரினிக்காப்பார் .....**
> **"ஆவாலூர் வான்கதி சேர்ந் தாங்குவப்பீர் நாயகிசேர்**
> **(தேம்.திரு.பட, பா.எ.37)**